


**26. 10. 2025**

## தலைப்பு செய்திகள்

1. நாடுமுழுவதும் உள்ள பல்வேறு சமூகத்தினர் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் வலியுறுத்தியுள்ளார்.

2. குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இரண்டு நாள் பயணமாக இன்று செஷல்ஸ் புறப்பட்டார்.

3. காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்வதற்கான ஈரப்பதத்தை 22 சதவிகிதமாக உயர்த்துவது குறித்து மத்திய குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

4. வங்க கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இன்று வலுவடைந்ததாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் நவிமும்பையில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

**********

பிரதமர்

நாடுமுழுவதும் உள்ள பல்வேறு சமூகத்தினர் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 127-வது முறையாக இன்று உரையாற்றிய அவர், இயற்கை மற்றும் சமூக ஒற்றுமையின் பிரதிபலிப்பாக சத்பூஜை திகழ்கிறது என்றார்.

பண்டிகை காலங்களில் பக்தி, பாரம்பரியத்தின் சங்கமம் ஆகியவை மக்களிடையே வெளிப்படுவது ஊக்கமளிப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

அண்மையில் நாட்டு மக்களுக்கு அவர் எழுதிய கடிதத்தில் பல்வேறு துறைகளின் சாதனைகள் பண்டிகைகளை மேலும் ஆக்கப்பூர்வமாக மாற்றியதாக தாம் எடுத்துரைத்ததை சுட்டிக்காட்டினார்.

ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கை ஒவ்வொரு இந்தியரையும், பெருமையடைய செய்ததாக தெரிவித்த பிரதமர், இந்தாண்டு மாவோயிஸ்ட் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் பண்டிகைகள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டதாக கூறினார்.

சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களால் உள்நாட்டு பொருட்களை மக்கள் வாங்குவது தற்போது அதிகரித்துள்ளதாக மகிழ்ச்சி வெளியிட்ட பிரதமர், ஒவ்வொருவரும் சமையல் எண்ணெய் பயன்பாட்டை 10 சதவிகிதம் அளவிற்கு குறைக்க தாம் வலியுறுத்தியதற்கு

மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பல்வேறு நகரங்களில் பிளாஸ்டிக் கழிவுகளை தூய்மை செய்யும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக கூறிய பிரதமர் சதுப்பு நிலங்கள் கடல் சார் சுற்று சூழலை பாதுகாப்பதில் மிக முக்கிய பங்காற்றுவதாக தெரிவித்தார்.

சுனாமி உள்ளிட்ட பேரழிவுகளின் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதில், சதுப்பு நிலங்களின் பங்கு குறித்து எடுத்துரைத்த பிரதமர், இதுகுறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் பிரச்சாரத்தின் கீழ் மக்கள் தற்போது மரக்கன்றுகளை நடும் பணிகளில் பெருமளவில் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

எல்லை பாதுகாப்பு படை மற்றும் மத்திய ரிசர்வ் காவல் படையில் தற்போது இந்திய இன நாய்களுக்கு, பயிற்சி அளிக்கப்படுவதாக கூறிய பிரதமர், இதற்கான பிரத்யேக மையத்தில் தொழில்நுட்பம் மற்றும் புதுமைகளின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

சட்டிஸ்கட்டில் மாவோயிஸ்ட்டுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 8 கிலோ வெடி பொருட்களை, இத்தகைய பயிற்சி நாய்கள் கண்டறிந்ததை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இரும்பு மனிதர் என்று போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலின் 150ஆவது பிறந்த தினம் வரும் 31ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளதை அடுத்து குஜராத் ஒற்றுமை சிலை

அருகே பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக கூறிய பிரதமர், இதன்ஒருபகுதியாக இந்திய நாய்களின்

திறன்களை வெளிப்படுத்தும் அணிவகுப்பு நிகழ்ச்சியும் இடம்பெற உள்ளதாக கூறினார்.

விடுதலை போராட்டத்தில் பட்டேலின் பங்களிப்பு இன்றளவும் நினைவு கூறப்படுவதாக கூறிய பிரதமர், நாட்டின் கட்டமைப்பிற்கு வலுவான அடித்தளத்தை அமைத்தவர் பட்டேல் என்று புகழாரம் சூட்டினார்.

நாடுமுழுவதும் அன்றைய தினம் நடைபெற உள்ள ஒற்றுமை ஓட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

நம் நாட்டின் கா.்.பி தற்போது உலகம் முழுவதும் பிரபலமடைந்து வருவதாக கூறிய பிரதமர் கர்நாடகாவின் சிக்மகளூர் கூர்க், தமிழகத்தில் நீலகிரி, பழனி, சேர்வராயன்மலை உள்ளிட்ட இடங்களின் கா.்.பி பயிர் இந்திய கா.்.ப்யின் அடையாளத்தை மேலும் வலுப்படுத்துவதாக கூறினார்.

தேச பக்திக்கு உறுதியான குரல் வடிவத்தை வழங்கும் வந்தே மாதரம் பாடல் இயற்றப்பட்ட 150ஆவது ஆண்டு தினம் வரும் 7ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளதை எடுத்துரைத்த பிரதமர் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இப்பாடல் இன்றளவும் நமக்கு உத்வேகம் அளிப்பதாக கூறினார்.

இப்பாடலை போற்றும் வகையிலான பதிவுகளை வந்தேமாதரம் 150 என்ற Hastag-உடன் தமக்கு பகிருமாறு பிரதமர் கேட்டுக்கொண்டார்.

சமூக ஊடகங்கள் சமஸ்கிருத மொழிக்கு புத்துயிர் அளித்துள்ளதாக கூறிய பிரதமர், இம்மொழியை வளர்க்கும் வகையிலான தங்களது முயற்சிகளை மக்கள் சமூக ஊடகங்களில் பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

சுதந்திர போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாற்றை இளையோர் கற்றறிய வேண்டும் என்று கூறிய பிரதமர், பகவான் பிர்ஸா முண்டாவின் பிறந்த தினம் அடுத்த மாதம் 15ஆம் தேதி ஜன் ஜாதிய திவஸாக கொண்டாடப்பட உள்ளதை சுட்டிக்காட்டினார்.

பழங்குடியின மக்களின் சமூக உரிமைகளுக்காக பிர்ஸா முண்டா ஆற்றிய சேவை ஈடு இணையற்றது என்றார்.

சமூக மேம்பாட்டிற்காக நாம் அனைவரும் தொடர்ந்து ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் விளையும் கா.்.பி பயிர் குறித்து பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்றைய மனதின் குரல் நிகழ்ச்சியில் குறிப்பிட்டது மகிழ்ச்சியளிப்பதாக அப்பகுதி விவசாயி தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

பிரதமர் - உச்சிமாநாடு

கோலாலம்பூரில் இன்று நடைபெறும் 22ஆவது ஆசியான் உச்சி மாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி காணொலி மூலம் பங்கேற்கிறார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் உள்ளிட்ட பல்வேறு நாட்டு தலைவர்கள் பங்கேற்கும் இம்மாநாட்டில் ஆசியான் நாடுகளுடனான உறவை மேம்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

கிழக்கு தீமோர் ஆசியான் நாடுகளின் 11ஆவது உறுப்பினர் நாடாக இன்று இணைக்கப்பட்டது.

இதனிடையே நாளை நடைபெறும் 20ஆவது கிழக்காசிய உச்சிமாநாட்டில் பிரதமர் சார்பில், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் பங்கேற்க உள்ளார்.

இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் அமைதி ஸ்திரதன்மை, மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்படும்.

**********

சி.பி.ராதாகிருஷ்ணன்

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இரண்டு நாள் பயணமாக இன்று சிஷெல்ஸ் புறப்பட்டார்.

அந்நாட்டு அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் பேட்ரிக் ஹெர்மினின் பதவி ஏற்பு விழாவில் பங்கேற்பதற்காக அங்கு செல்லும் குடியரசு துணை தலைவரின் பயணம் இருநாடுகளுக்கிடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**********

முதலமைச்சர்

சென்னை அடையாறு முகதுவாரத்தில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின், மாநில அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் இன்றுகாலை நேரில் ஆய்வு செய்தனர்.

இப்பணிகளை போர்கால அடிப்படையில் விரைந்து முடிக்க முதலமைச்சர் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

**********

மத்திய குழு

நெல்லின் ஈரப்பத அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக உயர்த்தி கொள்முதல் செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய குழுவினர் இரண்டாவது நாளாக இன்றும் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

திருவள்ளூரில் செம்மேடு, காக்காவாக்கம் சூளைமேனி உள்ளிட்ட நெல்கொள்முதல் நிலையங்களை மத்திய குழுவினர் இன்று ஆய்வு செய்துவருவதாக ஆட்சித்தலைவர் திரு.பிரதாப் கூறியுள்ளார்.

வாய்ஸ்

திருச்சி, தஞ்சை, மாவட்டங்களிலும் மத்திய குழுவினர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

**********

தமிழக அரசு அறிக்கை

இதனிடையே தமிழகத்தில் நடப்பாண்டில் நெல் கொள்முதல் பணிகள் கடந்த செப்டம்பர் மாதம் முதல் நடைபெறுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இப்பணிகளை விரைந்து முடிக்கும் வகையில் நேரடி கொள்முதல் நிலையங்கள் கூடுதலாக மாலை 6 மணிமுதல் 8 மணி வரை செயல்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

நாளொன்றுக்கு ஆயிரம் மூட்டைகள் நெல் கொள்முதல் செய்யப்படுவதாக கூறியுள்ள அரசு, தஞ்சை திருவாரூர் மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் கொள்முதல் நிலையங்கள் செயல்படுவதாக தெரிவித்துள்ளது.

அரசின் துரித நடவடிக்கைகளால் கொள்முதல் செய்யப்படும் நெல், மாவட்டங்களுக்கு ரயில்கள் மூலம் அனுப்பப்படுவதாகவும் கூறியுள்ளது.

**********

**வானிலை**

வங்க கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இன்று வலுவடைந்ததாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது சென்னைக்கு கிழக்கு தென்கிழக்கே 790 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளதாகவும், இது அடுத்த 24 மணிநேரத்தில் தென்மேற்கு மத்திய மேற்கு வங்க கடலில் புயலாக வலுப்பெற்று நாளை மறுநாள் அதி தீவிர புயலாக கரையை கடக்க கூடும் என்றும் கூறியுள்ளது.

புயல் கரையை கடக்கும்போது மணிக்கு 110 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் அம்மையம் தெரிவித்துள்ளது.

சென்னை கடலூர் நாகை எண்ணூர், காட்டுப்பள்ளி பாம்பன் தூத்துக்குடி துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

இதனிடையே சென்னை செங்கல்பட்டு காஞ்சிபுரம் திருவள்ளூர் விழுப்புரம் ராணிப்பேட்டை வேலூர் திருவண்ணாமலை கள்ளக்குறிச்சி கடலூர் மயிலாடுதுறை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

**********

மழை

பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 45 அடியை எட்டியுள்ளதை அடுத்து அணையிலிருந்து 2 ஆயிரத்து 50 கன அடி தண்ணீர் கோதையாறு, குழித்துறை தாமிரபரணி, காளிதேசம் ஆறுகளில் திறந்துவிடப்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியில் வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து இரண்டாவது நாளாக இன்றும் சுற்றுலா பயணிகள் செல்ல தடை நீடிக்கிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் பெரியார் நீர்வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதை அடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறை தடை விதித்துள்ளது.

கும்பக்கரை அருவியிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படவில்லை.

**********

இருவரி

போலியோ ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நடைபயணம் மயிலாடுதுறையில் இன்று நடைபெற்றது.

சமூகநல அமைப்புகள் சார்பில் நடைபெற்ற இந்த நடைபயணத்தின் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

விழுப்புரம் மாவட்டம் தொழில்மையம் சார்பில் உற்பத்தி செய்யப்படும் வேளாண் பொருட்கள் மற்றும் கடல்சார் கைவினை பொருட்கள் கண்காட்சி நாளை மறுநாள் நடைபெற உள்ளது.

சுற்றுசூழல் பாதுகாப்பு, விழிப்புணர்வு, ஆராய்ச்சி உள்ளிட்டவைகளில் சிறந்து விளங்கும் தனி நபர் மற்றும் நிறுவனங்களுக்கான சுற்றுசூழல் விருதுபெற வரும் 14ஆம் தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

**********

கந்த சஷ்டி

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் கந்த சஷ்டி விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரஸம்ஹாரம் நாளை நடைபெறுவதை ஒட்டி முருகப்பெருமான் அன்னை வேல் நெடுங்கண்ணியிடம் சக்தி வேல் வாங்கும் நிகழ்வு நாகை சிக்கல் சிங்காரவேலர் கோவிலில் இன்று இரவு நடைபெறுகிறது.

இதற்காக சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது நாகை செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**********

கிரிக்கெட்

உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் நவிமும்பையில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

பிற்பகல் 3 மணிக்கு இப்போட்டி நடைபெறுகிறது.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது